Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 81/2025**

Preliminary Register

Deposition of **PW- 4 LW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கீதா | Father Name | : | ரவி என்ற ரவிக்குமார் |
| Village | : | தாம்பரம் | Taluk | : | சென்னை |
| Age | : | 37 | Calling | : | செவிலியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 7th day of May 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு. R. கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து தனியார் மருத்துவமனையில் செவிலியராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தப்பா மகன் ஆவார். 07.06.2025ம் தேதி பாதிரிபுரத்தில் உள்ள எனது தாயார் வீட்டின் அருகே உள்ள காமாட்சியம்மன் கோவிலுக்கு திருவிழாவிற்காக வந்திருந்தேன். கடந்த 10.06.2025 ம் தேதி மாலை 07.00 அளவில் ஊஞ்சல் உற்சவம் நடத்திக்கொண்டிருந்தோம். ஆஜர் எதிரிகள் எங்களை பார்த்து பால்குடம், அலகு காவடி ரொம்ப நேரம் ஆடக்கூடாதுன்னு சொல்லி தடுத்துவிட்டார்கள். அதனால் இன்று எங்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும் வரை ஊஞ்சல் உற்சவம் நடத்தப்படாது என்று தடுத்துவிட்டார்கள். எனது சித்தப்பா மாரிமுத்து எதிரிகளிடம் பிறக பேசிக்கொல்லலாம் என்று கூறிக்கொண்டிருந்தபோது

ஆஜர் எதிரிகள் எனது சித்தப்பாவை அடித்துவிட்டார்கள். ஊர் பெரியவர்கள் மத்தியஸ்தம் செய்து எங்களை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். அன்று இரவு 10.00 மணியளவில் எதிரிகள் மற்றும் 4, 5 நபர்களை அழைத்து கொண்டு வந்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி எனது தம்பி மணிகண்டனையும் தாக்கினார்கள். எனது சித்தப்பா மாரிமுத்துவை இடது பக்க நெற்றியில் அடித்ததால் அவருக்கு இரத்தம் ஊற்றியது. நான் சண்டையை மறிக்க சென்றபோது வலது முழங்கையில் எனக்கு காயம் ஏற்பட்டது. பிறகு காவல் நிலையம் சென்று நாங்கள் புகார் கொடுத்தோம். காயம்பட்ட நாங்கள் வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம். எனது சித்தப்பா மாரிமுத்துவிற்கு காயம் அதிகம் இருந்ததால் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

நான் முதல் விசார்ணையில் கூறியுள்ள விபரங்களை போலீசார் கொடுத்த வாக்குமூலத்தினை படித்துபார்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள எனது சித்தப்பா மாரிமுத்துவிற்கு இடது நெற்றியில் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள, " நான் சண்டையை மறிக்க சென்றபோது வலது முழங்கையில் எனக்கு காயம் ஏற்பட்டது. பிறகு காவல் நிலையம் சென்று நாங்கள் புகார் கொடுத்தோம்." என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. வலங்கைமான் அரசு மருத்துவமனை மருத்துவர் என்னிடம் காயம் குறித்து விசாரணை செய்து எழுதிக்கொண்டுதான் சிகிச்சை அளித்தாரா என்றால் எழுதிக்கொண்டாரா என்று எனக்கு தெரியவில்லை ஆனால் கேட்டார்கள். நான் எனது முதல்விசாரணையில் கூறியதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் யாரும் தாக்கவில்லை என்றாலும் கோவில் திருவிழாவில் காவடி எடுக்கும்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளில் எனது சித்தப்பாவிற்கு ஏற்பட்ட கீரல் காயத்தை பயன்படுத்தி

எதிரிகளுக்கு எதிராக முன்விரோதத்தின் காரணமாக பொய்ப்புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.05.07 18:22:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 81/2025**

Preliminary Register

Deposition of **PW- 5 LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கணேசன்(எ) கார்த்திகேயன் | Father Name | : | வேலாயுதம் |
| Village | : | பாதிரிபுரம் | Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 40 | Calling | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 7th day of May 2026.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு. R. கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 12.06.2025ம் தேதி மதியம் 01.30 மணியளவில் அ.சா.1 மணிகண்டன் வீட்டில் இருந்தபோது அங்கு வந்த போலீசார் அடிதடி வழக்கு சம்பந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் **அ.த.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

அ.சா.1 எனது மாமா மகன் ஆவார். அ.சா.2 மாரிமுத்து எனது மாமா ஆவார். நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் காகிதத்தில் என்ன எழுதியிருந்தது எத்தனை பக்கங்கள் எழுதியிருந்தது என்ன தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருந்தது என்றால் என்ன தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது ஒரு பக்கத்தில்தான் எழுதப்பட்டிருந்தது. கையொப்பத்தை நான் காவல் நிலையத்தில்தான் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் 2 எனது உறவினர்கள் என்பதால் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.05.07 18:22:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.